**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

C.C. No: 187 of 2024

DATE : 14.08.2025

Depositions of witness for Prosecution

PW: 7

| Name | மருத்துவர் ஜெயலட்சுமி | Caste | |
|---|---|---|---|
| Father/Husband's Name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 14th day of August 2025

**(எதிரிகள் ஆஜர்)**

முதல் விசாரணை : –

நான் தற்பொழுது திருப்பூர் மாவட்டம் குன்னத்தூர் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் முது நிலை உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு வத்திராயிருப்பு அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்த பொழுது கடந்த 15.07.2015 மாலை 7.15 மணிக்கு கூமாபட்டி பள்ளிவாசல் தெருவை சேர்ந்த யூசுப் அன்சாரி என்பவர் தன்னை 15.07.2015 அன்று காலை 10.30 மணி அளவில் தைக்கா பஜாரில் வைத்து அடையாளம் தெரிந்த மூன்று நபர்கள் தன்னை தாக்கியதாக சிகிச்சைக்கு சேர்த்த வரை பரிசோதித்து பார்த்ததில் அவருக்கு வலது கையில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது. அவரை புற நோயாளியாக சிகிச்சை அளித்து அனுப்பி வைத்தேன். அவருக்கு ஏற்பட்ட காயம் சிறுகாயம் என்று சான்று வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச் சான்று நான் வழங்கியது தான். விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச் சான்று அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அவருடன் வந்த கூமாபட்டி பள்ளிவாசல் தெருவை சேர்ந்த ஜியாவுதீன் என்பவர் கடந்த 15.07.2015 அன்று காலை 10:30 மணிக்கு அடையாளம் தெரிந்த நான்கு நபர்கள் தைக்கா பஜாரில் வைத்து தாக்கியதாக சிகிச்சைக்கு சேர்ந்தவரை பரிசோதித்துப் பார்த்ததில் அவருக்கு புற காயங்கள் எதுவும் காணப்படவில்லை. அவரை புறநானியாக சிகிச்சை அளித்து அனுப்பி வைத்தேன்.

அவருக்கு ஏற்பட்ட காயம் சிறுகாயம் என்று சான்று வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச் சான்று நான் வழங்கியது தான். விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச் சான்று அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை : –

காலை 9 மணிக்கு தாக்கியதாக சொல்லப்படும் நேரத்தில் இருந்து காலதாமதாகத்தான் மருத்துவமனையில் சிகிச்சைக்காக வந்து சேர்ந்தார்கள் என்றால் சரிதான். காயப்பட்டதாக சொல்லப்படும் நபர்களுக்கு அவர்கள் தன்னிச்சையாக நிலை தடுமாறி கீழே விழுந்தால் நான் சொல்லியுள்ள காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்.

மறு விசாரணை : – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒம்/–எம்.இராமநாதன்/–
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு